மக்கள் போராடினால் தலைவணங்கி அதை மாற்றுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். இதைப் பொறுத்தவரை, இது தனியார் மனமகிழ் மன்றம்; அது சட்டத்திற்குட்பட்டுதான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. வேண்டுமென்றால், நாங்களும் அதிகாரிகளோடு கலந்துபேசி, முடிவெடுப்போம். பொதுவான பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினால், 'நீங்கள் வேறு இடத்தில் வைத்துக்கொள்ளுங்கள்' என்று நாங்கள் அவர்களுக்கு அறிவுரைதான் வழங்கமுடியுமே தவிர, சட்டப்படி நாங்கள் நடவடிக்கை எடுக்க முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) மடத்துக்குளம் தொகுதி, விவசாய விளைபொருட்களை சேமிக்க குளிர்பதனக் கிடங்கு அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மடத்துக்குளம் தொகுதியில் விவசாய விளைபொருட்களைச் சேமிக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு அறிவிப்பிற்கு உரிய விவர அறிக்கை பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2017 ஜூலை 18] **[திரு. இரா. துரைக்கண்ணு]**

அறிக்கை

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட பகுதியில் தக்காளி 390 ஹெக்டேரிலும், வெங்காயம் 311 ஹெக்டேரிலும் பயிரிடப்பட்டு முறையே 14,040 மற்றும் 11,196 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இப்பயிர்களில் மொத்த உற்பத்தியான 25,236 மெட்ரிக் டன் உற்பத்தியில் விவசாயிகளின் சுயதேவை நீங்கலாக, மொத்த விற்பனை உபரி 24,731 மெட்ரிக் டன் ஆகும். இப்பகுதியில் பெறப்படும் விற்பனை உபரியானது சுமார் 14 கி.மீ. தொலைவில் உள்ள உடுமலை உழவர் சந்தை மற்றும் மடத்துக்குளம் பகுதியில் உள்ள வாரச் சந்தைகளில் விவசாயிகளால் விற்பனை செய்யப்படுகிறது. இது தவிர, அண்டை மாநிலமான கேரளா மொத்த சந்தைகளுக்கு வியாபாரிகளால் எடுத்துச் செல்லப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது. எனவே, இப்பகுதியில் இருப்பு வைத்து விற்பனை செய்யும் அளவிற்கு உபரி விளைபொருட்கள் ஏதும் இல்லாததால் குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டிய அவசியம் ஏதும் எழவில்லை.

மேலும், விளைபொருட்களை இருப்பு வைக்கத் தேவையுள்ள காலங்களில் மடத்துக்குளத்திலிருந்து 13 கி.மீ. தொலைவில் உள்ள உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் ஊரக உட்கட்டமைப்பு நிதியின்மூலம் 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இதனை மடத்துக்குளப் பகுதி விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் உடுமலை ஊராட்சி ஒன்றியப் பகுதிகள், அமராவதி அணை மற்றும் PAP திட்டத்தின்மூலம் பாசனம் பெற்று வருகின்ற பகுதிகளாக உள்ளன. இங்கே முக்கிய விவசாயமாக தக்காளி, வெங்காயம், கத்தரி, மிளகாய், வெண்டை, பூசணி, அவரை, பொறியல்தட்டை உள்ளிட்ட காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றில், குறிப்பாக, தக்காளி அதிகமாகப் பயிரிடப்படுகிறது. அப்படி*

உற்பத்தி செய்யப்படுகின்ற தக்காளி உள்ளிட்ட பொருட்கள், வாரச் சந்தைகள் மற்றும் தினசரி சந்தைகளாக உள்ள உடுமலை, கனியூர், கரட்டுமடம் உள்ளிட்ட சில பகுதிகளுக்கு விற்பனை செய்யப்படுவது வழக்கமாக உள்ளது. ஆனால், அதிகமாக தக்காளி உற்பத்தி செய்யப்படுகின்ற காலங்களான ஆடி, ஆவணி, புரட்டாசி மற்றும் தை, மாசி, பங்குனி காலங்களில் மடத்துக்குளம் பகுதியில் சுமார் 350 ஹெக்டேர் நிலப்பரப்பிலும், அதைப்போல, உடுமலைப் பகுதியில் 350 ஹெக்டேர் நிலப்பரப்பிலும், அதைப்போல குடிமங்கலம் பகுதியில் 200 ஹெக்டேர் நிலப்பரப்பிலும் பயிரிடப்படுவதால், அதிக உற்பத்தியாகி, ஒரு நாளைக்கு சுமார் 80 லோடு தக்காளியை வாகனங்களில் ஏற்றி வெளியில் விற்பனை செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளது. சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தக்காளிப் பெட்டிகளை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு தக்காளி உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆகவே, அந்தப் பருவத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் உள்ளூர் தேவையைப் பூர்த்தி செய்ததுபோக, மீதியுள்ளவை தமிழகம் முழுவதும் அனுப்பப்படுகின்றன. குறிப்பாக, சென்னை முதல் கன்னியாகுமரி வரையுள்ள பகுதிகளில் மட்டுமல்லாமல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், *உரையை முடியுங்கள். பின்னர், இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்புத் தருகிறேன். உரையை முடியுங்கள்.*

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: *ஒரு நிமிடத்தில் உரையை முடித்து விடுகிறேன். அதைப்போல, மும்பை, டெல்லி உள்ளிட்ட வட மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆகவே, அந்த நேரங்களில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையில் குறிப்பிட்ட உடுமலை வாரச் சந்தை, உழவர் சந்தைப் பகுதிகள் நீங்கலாக, பல்வேறு இடங்களில் தற்காலிக மார்க்கெட்டுகளாக மைவாடி, மலையாண்டிகண்ணூர், சித்தக்கொட்டை, இந்திராநகர், தாந்தோணி, எரிசனம்பட்டி, கரட்டுமடம், கனியூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகள் இயங்குவதால், அந்த நேரத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களைப் பாதுகாக்க விவசாயிகளின் நலன் காக்கின்ற வகையில் குளிர்பதனக் கிடங்கு ஒன்றை மடத்துக்குளம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

2017 ஜூலை 18]

பிற்பகல் 12–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின்மூலம் 132 குளிர்பதனக் கிடங்குகள் சுமார் 11,547 மெட்ரிக் டன் கொள்ளளவில், தமிழகத்தின் பெரும்பான்மையான மாவட்டங்களில் விவசாயிகளின் நலனுக்காக அமைக்கப்பட்டு பயன்பாட்டிலுள்ளன. மடத்துக்குளம் தொகுதியில் தக்காளி மற்றும் வெங்காயம் ஆகியவை 25,236 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகின்றன. மடத்துக்குளம் தொகுதியிலுள்ள மணத்தூர், கொழுமம், கனியூர், குமாரலிங்கம் பகுதிகளிலுள்ள வாரச் சந்தைகளிலும், கோயம்புத்தூரிலுள்ள மொத்தச் சந்தையிலும் இப்பகுதியில் விளையும் வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இருப்பினும், விவசாயிகளின் நலன்கருதி, மடத்துக்குளத்திலிருந்து 13 கி.மீ. தொலைவில் உள்ள உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்பட்டு பயன்பாட்டிலுள்ளது. மேலும், மடத்துக்குளத்திலிருந்து ஏறக்குறைய 30 கி.மீ. தொலைவிலுள்ள செஞ்சேரியிலும், 40 கி.மீ. தொலைவிலுள்ள பல்லடத்திலும், 50 கி.மீ. தொலைவிலுள்ள பொங்கலூரிலும் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டிலுள்ளன. மேற்படி செஞ்சேரி குளிர்பதனக் கிடங்கின் மொத்தக் கொள்ளளவும் முழுமையாகப் பயன்படுத்தப்படாத நிலை உள்ளது. எனவே, மடத்துக்குளம் பகுதி விவசாயிகள், ஏதேனும் உபரி இருக்கும்பட்சத்தில் மேற்கண்ட 2 குளிர்பதனக் கிடங்குகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, மடத்துக்குளம் பகுதியில் விவசாய விளைபொருட்களின் உபரி போதிய அளவில் இல்லாத நிலையில், தனியாக குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், சுருக்கமாகக் கேளுங்கள்.*

[2017 ஜூலை 18

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட மடத்துக்குளம் வட்டத்தில் அமராவதி ஆற்றுப் பாசனம் மற்றும் அமராவதி பிரதான கால்வாய் பாசனப் பகுதிகளில், கரும்பு, தென்னை, நெல் ஆகிய பயிர்கள்தான் விவசாயம் செய்யப்பட்டு வந்தன. ஆனால், இந்த நிலை மாறி, கடந்த ஆறு ஆண்டுகளாக பருவமழை குறைவாகப் பெய்வதால், குறிப்பிட்ட பருவத்தில் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட முடியாத நிலை ஏற்பட்டு, மாற்றுப் பயிர்களாக காய்கறிகளைப் பயிரிட வேண்டிய நிலையில் உள்ளோம். ஆகவே, இங்கு கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகின்ற தக்காளி விவசாயத்தைப் பாதுகாக்கின்ற வகையில், மடத்துக்குளம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் குளிர்பதனக் கிடங்கு அமைத்துத் தர வேண்டும். இல்லையென்றால், தக்காளி sauce அல்லது jam தயாரிக்கின்ற தொழிற்சாலையை தமிழக அரசின்மூலமாக ஏற்படுத்தித் தந்தால், விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்க்கும் விதமாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கின்றார்கள். அமராவதி அணையிலிருந்து குடிநீருக்காகத் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்றும், ஆற்றுப் பகுதியிலும், பிரதானக் கால்வாய்களிலும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கவன ஈர்ப்பு என்ன கொடுத்தீர்கள்? இப்போது என்ன கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்? திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: ஒரே ஒரு வரியில் கேட்டு முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேட்டு உரையை முடியுங்கள்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: இன்றைய நிலவரப்படி 49 அடி நீர் உள்ளது. அது இன்னும் 4, 5 அடிகள் அதிகரித்து, 54, 55 அடி வந்தால், ஆற்றுக்கும் பிரதான கால்வாய்க்கும் நீர் திறந்துவிட்டால் நிச்சயமாக அனைத்து விவசாயிகளும் முழுமையாகப் பயனடைகின்ற வகையிலே அமையும் என்று தெரிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தையும் ஈர்த்து அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டத்தில் 5 இடங்களில் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட்டு, அங்குள்ள விவசாயிகள் முழுவதுமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அங்கு ஆய்வுகள் மேற்கொண்டு, தேவைப்படுமாயின் அங்கே குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கான ஆய்வறிக்கையினை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அனுப்பி, அதனடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

5. அறிக்கை அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2018 ஆம் ஆண்டிற்கான, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் முதலாவது முதல் மூன்றாவது வரையிலான 3 அறிக்கைகளை இக்குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*